*66*

# ஆத்துமாவின் இல்லம்

## (21:9-21)

*இல்லம் - என்ன ஒரு அழகுமிகுந்த வார்த்தை! யாரோ ஒருவர், "இல்லம் எங்கேயோ அங்கேயே உள்ளம் இருக்கிறது" என்று கூறினார். ஆலிவர் வென்டெல் ஹோம்ஸ் என்பவர், இல்லம் என்பது நாம் "அன்புகூரும் இடமாக, நமது பாதங்கள் அதைவிட்டுச் சென்றாலும் நமது இதயங்கள் அதைவிட்டுச் செல்லாத இடமாக உள்ளது"[1] என்று கூறினார். ஜான் ஹோவர்டு பெய்ன் என்பவர், ''சந்தோஷங்கள், அரண்மனைகள் ஆகியவற்றின் மத்தியில் நாம் உலாவிக்கொண்டிருந்தாலும், அவைகள் என்றைக்குமே மிகவும் சிறுமையானவைகளாயிருக்கட்டும், இல்லத்தைப் போன்றதொரு இடமில்லை"[2] என்று எழுதினார்.*

*பூமிக்குரிய இல்லங்கள் இவ்வளவு அற்புதமானவைகளாய் இருக்கிற வேளையில், நம்மில் பலர் மேலே இருக்கிற இல்லத்திற்காக இன்னும் ஏக்கம் கொண்டிருக்கின்றோம். ''கர்த்தருடன் குடியிருத்தல்'' என்று பவுல் குறிப்பிட்ட அனுபவத்தைப் பெற நாம் விரும்புகின்றோம் (2 கொரிந்தியர் 5:8) - அந்த இடத்தில் இருத்தலென்பது ஞானவானான மனிதர் கூறியதுபோல "நித்திய வீடு" என்பதாக உள்ளது (பிரசங்கி 12:5), இதை ஜான் ரோ என்பவர், "ஆத்துமாவின் இல்லம்" என்று அழைத்தார்:*

> *நமது உழைப்பு முடிந்த பின்பு,*
> *நமது முயற்சிக்குத் தரப்படும் விலையான,*
> *நமது ஆத்துமாக்களுக்கு ஓய்வு என்பது,*
> *நித்திய அக்கரையில் தரப்பட்டால்.*
>
> *ஆத்துமாவின் இல்லம், அழகுமிக்க இல்லம்,*
> *அங்கு நாம் ஓய்ந்திருப்போம், ஒருக்காலும் அலைவதில்லை;*
> *எல்லாக் கவலைகளிலும் இருந்து விடுதலையாகி,*
> *சந்தோஷமாய், பிரகாசமாய் இருப்போம்*
> *இயேசு அங்கிருக்கின்றார், அவரே ஒளி! ...*[3]

*வெளிப்படுத்தின விசேஷம் 21:9முதல் 22:5முடிய உள்ள வசனப்பகுதியில் காணப்படுகிறபடி, "ஆத்துமாவின் இல்லத்தினுடைய" பண்பினங்கள் சிலவற்றை எண்ணி மதிப்பிடுவதே இந்தப் பாடத்தின் நோக்கமாகும். நாம் அவ்வாறு செய்யும்போது, அந்த அடையாளத்துவ மொழிநடை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று புரிந்து கொள்வோம். நியூகினியா நாட்டின் பழங்குடியினர் ஒருவருக்கு, எஸ்கிமோக்களின் இக்ளூ*

என்ற வீட்டைப்பற்றி நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்? பாலைவனப்பகுதியில் நாடோடி வாழ்க்கை வாழ்பவர் ஒருவருக்கு மின்னசோட்டாவின் ஏரிகளைப் பற்றி நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்?[4] ஒருமாடிக் கட்டிடத்தைவிட உயரமான வேறு கட்டிடம் எதையும் கண்டேயிராத ஒரு சிறுவனுக்கு நியூயார்க் நகரத்தைப் பற்றி நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்? மேலே கூறப்பட்ட விஷயங்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் விவரிப்பானது, அவர்கள் தங்கள் வாழ்வில் அனுபவித்துள்ளவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும் - மற்றும் ஒவ்வொரு விஷயத்திலும், உங்கள் விவரிப்பானது உண்மைநிலைக்குக் குறைவானதாகவே இருக்கும். இதேவிஷயம் யோவான் பரலோகத்தைப் பற்றி விவரித்த வேளையிலும் உண்மையாகவே இருந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு கிறிஸ்தவத் தம்பதிகளுக்கு ஒரு அழகிய பெண்குழந்தை பிறந்தது. அவள் பார்வைக்குறைவு என்ற பிரச்சனையைக் கொண்டிருந்ததை, பல வாரங்களுக்குப் பின்பு அவளது பெற்றோர் கவனித்தறிந்தனர். கண்மருத்துவ நிபுணர் ஒருவர் அவர்களிடத்தில், “உங்கள் மகள் மேரி, ஏறக்குறைய பார்வையற்ற நிலையிலேயே இருக்கின்றாள். அவள் ஒருக்காலும் பார்வையடைய இயலாது போகலாம்” என்று கூறினார். பின்பு அவர், “ஆனாலும், அவள் பன்னிரண்டு வயதாகும்போது, ஒரு அறுவை சிகிச்சை செய்தால் அது அவளுக்கு ஏறக்குறைய சாதாரணமான பார்வைத் திறனைத் தரக்கூடும்” என்றும் கூறினார்.

மேரியின் பெற்றோர்கள் அந்தப் பன்னிரண்டு ஆண்டுகள் காத்திருப்பின்போது என்ன உணர்வைப்பெற்றிருப்பார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்ய முடியும். கடைசியில் மேரி தனது பன்னிரண்டாம் வயதை அடைந்தபோது அவர்கள், ஐரோப்பாவில் இருந்த மிகச்சிறந்த கண் அறுவைச்சிகிச்சை நிபுணரிடத்தில், அறுவைச்சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தனர். ஆல்ப்ஸ் (மலைப்) பகுதியில் இருந்த ஒரு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நடைபெற வேண்டியிருந்தது. அதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது, மேரியின் தாய் அவளைப் பற்றிக்கொண்டு, அவளது சிந்தையைத் திசைதிருப்புவதற்காக, தங்களைச் சுற்றிலும் இருந்த எழில்மிக்க மலைகளைப் பற்றிப் பேசினாள்.

அறுவைச்சிகிச்சையைத் தொடர்ந்து, பெற்றோரும், அறுவைச் சிகிச்சை நிபுணரும் மற்றும் மருத்துவ தாதிகள் ஆகியோர் பரபரப்புடன் காத்திருந்தனர். கடைசியாக, கண்கட்டுகள் அகற்றப்பட வேண்டிய வேளை வந்தது. மேரி இருந்த அறைக்கு வெளியே தெரிந்த கம்பீரமான மலையுச்சிகள், அவள் கண்ட முதல் காட்சிகளில் ஒன்றாக இருந்தது. அவள் தனது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடும் நிலையில், “அம்மா, இந்த உலகம் இவ்வளவு அழகானது என்று நீ என்னிடத்தில் கூறாதது ஏன்?” என்று கேட்டாள்.

மேரியின் தாய் அவளது தோள்களைக் கையில் பற்றிப் பிடித்துக்கொண்டு, “மேரி, நான் உனக்கு அதைக் கூற முயற்சி செய்தேன், ஆனால் என்னால் கூறத்தான் முடியவில்லை” என்று கூறினாள்.

அவ்வாறே, மீட்கப்பட்டுத் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும்

*நாம் மகிமையில் இல்லம் செல்லுகின்றபோது, "சகோதரர் யோவான் அவர்களே, இங்கு இவ்வளவு அழகாய் இருக்கிறதென்று நீங்கள் ஏன் எங்களுக்கு சொல்லவில்லை?" என்று கேட்போம். அவர் நம்மிடத்தில், "சிறுபிள்ளைகளே, இதைப் பற்றி நான் உங்களுக்கு ... வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்ல முயற்சி செய்தேன், ஆனால் என்னால் சொல்லத்தான் முடியவில்லை" என்று கூறுவார்.[5]*

*20ம் அதிகாரத்துடன் நான் போராடுகையில், சாலொமோனுடைய சிந்தை எனக்கு இருக்கும்படிக்கு நான் விரும்பினேன். 21 மற்றும் 22ம் அதிகாரங்கள்மீது (பாடங்களை) எழுதுகையில், தாவீதின் மொழி நடை எனக்கு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். இந்த அதிகாரங்களின் அடையாளத்துவத்தைப் புரிந்துகொள்வதில் உங்களுக்கு உதவுவதற்கு என்னால் இயன்ற அளவுக்குப் பணியாற்றுவேன். நான் அவ்வாறு செய்தபின்பு, பரலோகம் உண்மையில் எவ்வளவு அற்புதமானதாக இருக்கும் என்று வியப்படையும்படி நாம் விடப்படுவோம்!*

*இந்த பாடம் 21:9-21 வசனப்பகுதியின் மீதானதாக இருக்கும், அடுத்த பாடம் 21:22-22:5 வசனப்பகுதியை எடுத்துரைத்து முடிக்கும். (பரலோகம் என்ற) நகரம் எவ்வளவு அழகுமிகுந்ததாயிருக்கும் என்பதே இந்த எடுத்துரைப்பில் வலியுறுத்தமாயிருக்கும்.*

## *வியப்பில் ஆழ்த்தும் காட்சி (21:9-11அ)*

*நமது வேதவசனப்பகுதி, "பின்பு கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து, நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை,[6] உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி" (வசனம் 9) என்று தொடங்குகிறது. அந்த வேளைக்கென்று தேர்ந்துகொள்ளப்பட்ட செய்தியாளர் யார் என்ற விஷயம் திகைப்புக்குரியதாக உள்ளது: கோபகலசங்களில் ஒன்றை ஊற்றியிருந்த தூதர்களில் ஒருவரே இதற்கென்று தெரிந்துகொள்ளப்பட்டிருந்தார். அந்தக் கலசங்கள், பழிதீர்த்துக் கொள்ளுதல் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றுடன் இணைவு கொண்டிருந்தன, ஆனால் இந்தச் செய்தியோ வெற்றி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றைக்கொண்ட ஒன்றாக இருக்கிறது. ஒருவேளை, பழைய "மகா" பாபிலோனுக்கும், புதிய, பரிசுத்த எருசலேமுக்கும் இடையில் உள்ள நேரெதிர்ப்பண்பை நாம் காணக்கூடும்படி, இந்தத் தூதர் தேர்ந்துக் கொள்ளப்பட்டிருக்கலாம். 17:1, 2ல், கோபக்கலசத்தைக் கொண்டிருந்த தூதர்களில் ஒருவர் யோவானிடத்தில், "நீ வா, மகா வேசிக்கு ... வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன்" என்று கூறியிருந்தார். இப்போது, அந்த ஏழுதூதர்களில் ஒருவர் (ஒருவேளை அதே தூதராகவும் இருக்கலாம்), "நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்" என்று கூறினார்.*

*நீண்டகாலத்திற்கு முன்னர் மோசே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட*

தேசத்தைக் காணும்படிக்குப் பிஸ்காவின் கொடுமுடியில் நிற்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார் (உபாகமம் 3:27; 34:1). அதுபோலவே, யோவானுக்கு "தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதைக்[7] காண்பிக்க" தூதன் யோவானை, "பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின் மேல்[8] ... ஆவியில்,[9] கொண்டுபோய்" வைத்தார் (வசனங்கள் 10, 11அ). ("பரலோகத்தை விட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிற எருசலேமாகிய பரிசுத்த நகரம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

## ஒளிபொருந்திய நகரம் (21:11, 15, 16ஆ, 18ஆ, 21ஆ)

இறங்கிவரும் நகரமானது விலையேறப்பெற்ற ஆபரணம்போல் ஒளிவீசிற்று: "அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது" (வசனம் 11ஆ). யோவான் "தேவனுடைய மகிமையையே" கண்டார் (வசனம் 10அ). தொடக்கத்தில் சிங்காசனக்காட்சியில், தேவன் "வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்" என்று விவரிக்கப்பட்டார் (4:3). இங்கே நாம், படைப்பானது தன்னைப் படைத்தவரின் பண்பைபற்றிக்கொள்வதைக் காணுகின்றோம். அதுவும்கூட "பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போல்" இருந்தது. மின்னொளி வீசும் இரத்தினம் வானவில்லின் நிறங்களைக் கதிர்களாக வீசுவதைப் பற்றி நினைத்துப்பாருங்கள்.[10]

அந்தத் தூதன், "நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான்" (வசனம் 15).[11] நகரத்தின் அளவு நம்மை மதிமயங்கச் செய்கிறது: "அவன் அந்தக்கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது" (வசனம் 16ஆ; NIV). ஒரு ஸ்தாதி என்பது (இது ரோமானிய அளவுமுறைகளில் ஒன்றாகும்) ஏறக்குறைய ஒரு மைலில் எட்டில் ஒருபங்கு அளவாகும்.[12] இவ்விதமாக NASB வேதாகமமானது, அந்த நகரம் ஏறக்குறைய ஒவ்வொரு திசையிலும் "ஆயிரத்து ஐந்நூறு மைல்கள்"[13] அளவு கொண்டதாக இருந்தது என்று கூறுகிறது: ஆயிரத்து ஐந்நூறு மைல்கள் அகலம், ஆயிரத்து ஐந்நூறு மைல்கள் ஆழம், ஆயிரத்து ஐந்நூறு மைல்கள் உயரம்!

ஆயிரத்து ஐந்நூறு மைல்கள்: அது "ஏறக்குறைய, இலண்டனுக்கும் ஏதென்ஸ் நகருக்கும் இடையே உள்ள தூரமாக, நியூயார்க்கிற்கும் ஹுஸ்டனுக்கும் இடையே உள்ள தூரமாக, டெல்லிக்கும் இரங்கூனுக்கும் இடையே உள்ள தூரமாக, அடிலெய்டுக்கும் டார்வினுக்கும் இடையே உள்ள தூரமாக இருக்கிறது!"[14] ஆயிரத்து ஐந்நூறு மைல்கள் பெருக்கல் ஆயிரத்து ஐந்நூறு மைல்கள்: அது, "டெக்சாஸ் மாநிலத்தைப்போல் 8.4 மடங்கு பெரியதாகவும், ஆஸ்திரேலியா அல்லது ஐரோப்பாவைவிடப் பெரிதாகவும் உள்ள பகுதியாகும்"![15] மேலும் இந்த நகரமானது ஆயிரத்து

*ஐந்நூறு மைல்கள் உயரமாகவும் இருந்தது! ஒரு நூறுமாடிகள் கொண்ட ஒரு கட்டிடத்தைக் கற்பனை செய்துபாருங்கள். (அவ்வளவு உயரமானவை உலகத்திலேயே ஒருசிலதான் உள்ளன.) அந்தக் கட்டிடத்தை வட அமெரிக்கா முழுவதையும் மூடும்வரை இழுத்து நீட்டத்தொடங்குங்கள். அது நூற்றைம்பது மாடிகளாகும்வரை மேல்நோக்கியும் இழுத்து நீட்டுங்கள். பின்பு இதைப் பற்றி ஆச்சரியம் அடையுங்கள்: அந்த அளவுடைய தொண்ணூறு கட்டிடங்களை நீங்கள், ஆயிரத்து - ஐந்நூறு மைல்கள் உயரமான பரலோகத்தில் தொங்கவிட முடியும்! இந்த நகரம் பூமியில் எந்தக்காலத்திலும் உள்ள எந்த நகரத்தைப் போன்றதாகவும் இருப்பதில்லை என்று கூறுவது குறைவான மதிப்பீடாக உள்ளது!*

*16ஆ வசனப்பகுதியில் தரப்பட்டுள்ள மிகவியப்புக்குரிய அளவு விகிதங்கள், அந்த நகரத்தைப் பற்றி இரண்டு உண்மைகளை நமக்குக் கூறுகின்றன. முதலாவது, வெளிப்படுத்தின விசேஷத்தின் இந்தப் பகுதியில் (21:12, 14, 21; 22:2). மேலாதிக்கம் செலுத்தும் அடையாளத்துவ எண்ணான ''பன்னிரண்டு'' என்பதை பயன்படுத்துதலானது, அந்த நகரம் பூரணமானதாக இருக்கிறது என்ற கருத்தைப் பிரதிபலிக்கிறது. ''பன்னிரண்டாயிரம்'' என்பது - தெய்வீகத்துவத்திற்கான எண்ணை ("மூன்று") படைப்பிற்கான எண்ணுடன் ("நான்கு") பெருக்கக் கிடைப்பது - முழுமைத்துவம் அல்லது பூரணத்துவம் என்ற கருத்தைக் கொண்டுள்ளது.[16] பெருக்கப்பட்ட எண்ணான "பன்னிரண்டாயிரம்" என்பது முழுமையான பூரணத்துவத்தை குறிக்கிறது.[17] நகரம் கனசதுர வடிவில்[18] இருந்தது என்ற உண்மையின்மூலம் நகரத்தின் பிழையற்ற தன்மையும் நாடகத்துவப்படுத்தப்படுகிறது; கனசதுர வடிவத்தைப் பழங்காலத்தில் பூரணத்துவத்தின் அடையாளமாகக் கருதினர். தேவாலயத்தின் மகாப்பரிசுத்த ஸ்தலம் பூரணமான கனசதுரமாக இருந்தது (1 இராஜாக்கள் 6:20ஐக் காணவும்), மற்றும் புதிய எருசலேம், நிறைவான "மகாப் பரிசுத்த ஸ்தலம்" என்று அழைக்கப்பட்டுள்ளது.*

*இரண்டாவது, மிதமிஞ்சிய அளவு விகிதங்கள், பரலோகத்திற்குச் செல்வதற்கு உண்மையிலேயே விரும்புபவர்களுக்கு (ஆயத்தம் செய்யப்போதுமான அளவு அதை விரும்புகிறவர்களுக்கு)ப் போதுமான அளிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. அழைப்பு ஒவ்வொருவருக்கும் விரிவாக்கப்பட முடியும்: ''ஆவியும் மணவாட்டியும் 'வா' என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (22:17).*

*முழுமையாக நகரத்தைப் பொறுத்தமட்டில் இன்னும் ஒரு விபரம் தரப்பட்டுள்ளது: 18ம் வசனம், "நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது'' என்று கூறுகிறது (வசனம் 18ஆ), அதே வேளையில் 21ம் வசனம், "நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது'' என்று கூறுகிறது (வசனம் 21ஆ). வைரம்போன்று ஒளிவீசும் தங்கம்? பளிங்கைப்போல் ஒளி ஊடுருவிப் பாயும் தங்கம்? பூமிக்குரியதல்லாத இந்தக் கட்டுமானப் பொருளானது,*

*பரலோகம் பொன்னைப்போல், நேர்த்தியான பளிங்கைப்போல் மதிப்புமிக்கது என்பதற்கான அறிவித்தலாக உள்ளது.*

## *பாதுகாப்புச் சுவர்*
## *(21:12அ, 14, 17, 18அ, 19, 20)*

*அடுத்ததாக யோவானின் ஆர்வநோக்கு, நகரத்தின் சுற்றுச்சுவரை (மதிலை) நோக்கித் திரும்பிற்று. முதல் நூற்றாண்டில், பெரிய நகரம் ஒவ்வொன்றும் பாதுகாப்புச் சுவர்களை (மதில்களை)க் கொண்டிருந்தன. அதேபோன்று, பரலோக நகரமும் "பெரிதும் உயரமுமான மதிலை" கொண்டிருந்தது (வசனம் 12அ).*

*தூதன், பொற்கோல் ஒன்றை எடுத்து, "அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்து நான்கு முழமாயிருந்தது"[19] (வசனம் 17;* NIV*). ஒரு முழம் என்பது ஒரு மனிதனின் முழங்கை மூட்டில் இருந்து நடுவிரல்நுனி வரையுள்ள தூரமாகும் (இது ஏறக்குறைய ஒன்றரை அடியாக இருக்கும்). இவ்விதமாக,* NASB *வேதாகமத்தில் அந்த மதில்* "seventy-two yards"[20] *(எழுபத்து இரண்டு கெஜங்கள்) இருந்ததாக கூறப்படுகிறது. எழுபத்து - இரண்டு கெஜங்கள் உயரமா அல்லது எழுபத்தி இரண்டு கெஜங்கள் அகலமா/கனமா?* NIV *வேதாகமத்தில், அந்தச் சுவர் எழுபத்து இரண்டு கெஜங்கள் அகலம்/கனம் உடையதென்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் பெரும்பான்மையான எழுத்தாளர்கள் இங்கு உயரம்தான் குறிப்பிடப்படுகிறது என்று யூகிக்கின்றனர். இது எதைக்குறிக்கிறது என்பது பொருட்படுத்தப்பட வேண்டிய விஷயமாக இருப்பதில்லை.[21] பூரணத்துவத்தின் அடையாளம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதே குறிப்பிடத்தக்கதாக உள்ளது: பன்னிரண்டைப் பன்னிரண்டால் பெருக்குதல் (நூற்று நாற்பத்து நான்கு). நகரமானது பூரணமான பாதுகாப்பை மகிழ்வுடன் அனுபவித்தது.*

*நகரத்தைப்போன்றை (21:11), அதன் சுவரும் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது (வசனம் 18அ).[22] அது பூமிக்குரியதல்லாத பிரகாசத்துடன் ஒளிர்ந்தது.*

*சுவரின் அஸ்திபாரம்தான் அதன் மிகவியப்புக்குரிய அம்சமாயிருந்தது. நகரத்தின் சுவர்களுக்கு சாதாரணமாக ஒரு அஸ்திபாரம்தான் இருக்கும்; ஆனால் இந்தச் சுவருக்கு, "பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன," மற்றும் அந்தக் கற்களின்மேல், "ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின்[23] நாமங்களும் பதிந்திருந்தன" (வசனம் 14). இது நமக்கு, கிறிஸ்தவம் "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டு … அதற்கு இயேசுகிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" என்பதை (எபேசியர் 2:20) நினைவூட்டுகிறது.*

*மற்றும், ஒரு சுவரின் அஸ்திபாரம் என்பது வழக்கமாக, மேற்பரப்பிற்குக் கீழே இருந்தது; ஆனால் இந்த அஸ்திபாரக்கற்கள் காட்சிக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தன, மற்றும் இவைகள் "சகலவித இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன" (வசனம் 19அ).[24] இந்த மகத்துவமான*

*காட்சிப்படுத்துதலைக் கற்பனை செய்ய முயற்சி செய்யுங்கள் (வசனம் 19ஆ, 20). நீங்கள் வச்சிரக்கல்லின் பச்சை நிறம், இந்திர நீலக்கல்லின் நீலநிறம், சந்திரகாந்தக் கல்லின் பால்போன்ற மரநிறம், மரகதக் கல்லின் இளம்பச்சை நிறம், கோமேதகக் கல்லின் வெள்ளை நிறம், பதுமராகக் கல்லின் சிகப்புநிறம், சுவர்ணரத்தினக் கல்லின் பசும் மஞ்சள் நிறம், படிகப்பச்சையின் வைலட் நிறம், புஷ்பராகக் கல்லின் மஞ்சள் நிறம், வைடூரியக்கல்லின் பொன் பச்சை நிறம், சுநீரக் கல்லின் நீலநிறம் மற்றும் "கனவுக்கல்லான" சுகந்தியின் வைலட் நிறம். அப்போஸ்தர்களின் போதனை மற்றும் முன்மாதிரி ஆகியவற்றினால் இடப்பட்ட அஸ்திபாரத்திற்கு இது, எவ்வளவு மேன்மையான பாராட்டுரையாக உள்ளது!*

## ஆச்சரியமூட்டும் வாசல்கள்
## *(21:12ஆ, இ, ஈ, 13, 21அ)*

*யோவான், நகரத்தின் வாசல்களைப் பற்றியும் விவரித்தார். அவரது நாட்களில் இருந்த நகரங்கள் சாதாரணமான ஒரு வாசலைக் கொண்டிருந்தன, அந்த வாசல் இரவு வேளையில் அல்லது தாக்குதலின் கீழ் இருக்கும் வேளையில் மூடப்பட்டுவிடும். புதிய எருசலேமின் சுவரில், ''பன்னிரண்டு வாசல்கள்'' இருந்தன (வசனம் 12ஆ): ''கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள்'' (வசனம் 12). பன்னிரண்டு வாசல்கள் இருந்ததற்கு, "பரலோகத்திற்குப் பல வழிகள் உள்ளன" என்று மறைமுகமாய்க் கூறுதல் என்பது நோக்கமாயிருக்கவில்லை; இயேசு, ''நானே வழி'' என்று அறிவித்திருந்தார் (யோவான் 14:6). மாறாக, ''பன்னிரண்டு'' என்ற எண்ணானது மீண்டுமாக பூரணத்துவத்தைக் குறிக்கிறது: தங்களையே ஆயத்தம் செய்துகொள்ள மனவிருப்பமானவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. கிழக்கிலும், வடக்கிலும், தெற்கிலும் மற்றும் மேற்கிலும் இவ்வாசல்கள் இருந்தன என்ற உண்மையானது, கிறிஸ்தவத்தின் உலகளாவிய வேண்டுகோளைக் கருத்தாக தெரிவிக்கலாம்; பூமியின் எல்லாப் பாகத்திலிருந்தும், மனிதர்கள் வருவார்கள் (மத்தேயு 28:19; நடபடிகள் 1:8).[25]*

*பன்னிரண்டு வாசல்களின் அருகில் "பன்னிரண்டு தூதர்கள்" இருந்தனர் (வெளிப்படுத்தின விசேஷம் 21:13அ). தகுதியற்றவர்கள் உள்ளே நுழைவதைத் தடுக்கும்படி அந்தத்தூதர்கள் அங்கே நிறுத்தப்பட்டிருந்தனரா? ஒருவேளை விஷயம் அவ்வாறு இருக்கலாம் (21:27; 22:15). இதற்கு மறுபுறத்தில், தூதர்கள், "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்'' என்று கூறப்படுகிறது (எபிரெயர் 1:14). ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்போது, தூதர்கள் அகம் மகிழ்கின்றனர் (லூக்கா 15:7, 10), மற்றும் தூதர்கள், லாசருவை ஆபிரகாமின் மடிக்கு இட்டுச் சென்றனர் (லூக்கா 16:22). ஆகையால் நான், இந்தத் தூதர்கள், ''நல்லது, ... பிரவேசி ...'' (மத்தேயு 25:23) என்று*

கூறப்படுகின்றவர்களை வரவேற்பதற்கென்று கர்த்தரால் அலுவலகரீதியாக நியமிக்கப்பட்ட வரவேற்புக்குழுவினராய் இருக்கின்றனர் என்றே நினைக்கின்றேன்!

வாசல்களில் ''இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய[26] நாமங்களும்'' எழுதப்பட்டிருந்தன (21:13ஆ).[27] வெளிப்படுத்தின விசேஷத்தில், "பன்னிரண்டு கோத்திரங்கள்" ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்களின் (சபையின்; 7:4-8ஐக் காணவும்) அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும்,[28] வாதிக்கப்பட்ட சபையின் உறுப்பினர்களுக்கு உற்சாகமூட்டுதல் என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் திட்டவட்டமான நோக்கமாக இருந்ததாலும், இவ்விடத்தில் இந்தச் சொற்றொடர் அனேகமாகக் கிறிஸ்தவர்களையே குறிக்கலாம். இருப்பினும், இந்த அடையாளத்துவத்தை நாம், எல்லாக்காலங்களிலும் உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்கள் பரலோகத்தில் இருப்பார்கள் என்பதற்கான உறுதிப்பாடாக கண்ணோக்கவும் சாத்தியமுள்ளது (எபிரெயர் 11:39, 40ஐக் காணவும்).

வாசல்கள் எதைக்கொண்டு செய்யப்பட்டிருந்தன என்பதே அவற்றின் மிகவியப்புக்குரிய அம்சமாக உள்ளது: ''பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது" (வெளிப்படுத்தின விசேஷம் 21:21அ). இவைகள் ("முத்து வாசல்கள்'' என்று அடிக்கடி சித்தரிக்கப்படுவதுபோல்) முத்துக்களால் மூடப்பட்டிருக்கவில்லை; இவைகள் முத்துக்களாகவே இருந்தன, பழங்கால உலகத்தில் முத்துக்கள் என்பவை மிகவும் விரும்பித்தேடப்பட்ட ஆபரணக்கற்களாய் இருந்தன (மத்தேயு 13:46; 1 தீமோத்தேயு 2:9 ஆகியவற்றைக் காணவும்). இருபது - கிரெய்ன் (ஒருவகை அளவு) எடைகொண்ட ஒரு முத்து - உங்கள் சுண்டுவிரலின் முனையளவானது[29] - ஒரு பெருந்தொகை மதிப்புள்ளதாகும். அந்த அளவுகொண்ட சில முத்துக்களை ஒரு மனிதர் வைத்திருந்தால், அவர் வாழ்நாள் முழுவதும் ஓய்ந்திருக்க முடியும் என்றால், நகரத்தில் வாசல்களாக இருக்கக் கூடிய அளவுக்கு பன்னிரண்டு பி-ர-மா-ண்-ட-ம-ான முத்துக்களைப் பற்றி கற்பனை செய்து பாருங்கள்![30]

## முடிவுரை

நமது வேதவசனப்பகுதியில் உள்ள விவரிப்புகளை நாம் நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா? நேரடியாக அர்த்தம் கொள்பவர்களை மறுத்துரைப்பதில், சார்லஸ் ஸ்பர்ஜன் என்பவர், நகரத்தின் வாசலை வடிவமைக்கப் போதுமான அளவு பெரிய முத்தை உண்டாக்கத் தேவையான சிப்பியின் வடிவத்தைக் கணக்கிட்டுள்ளார்.[31] பின்பு அவர் அப்படிப்பட்ட ஒரு சிப்பியை வளர்க்கத் தேவையான கடலின் அளவையும் கணக்கிட்டுள்ளார். இந்த உருவகங்கள் நம்மை பிரமிக்கச் செய்வதற்கானவைகளாக - நம்மைப் பெருமூச்சுவிடச் செய்வதற்கான வைகளாக - நமது தலைகள் அசைத்து, "இதைக் காட்டிலும் பரலோகம்

*இன்னும் மிகவியப்புக்குரியதாக இருக்கும் என்றால், அது எவ்வளவு அற்புதமானதாக இருக்க வேண்டும்!"*[32] என்று கூறச் செய்பவைகளாக உள்ளன.

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்திற்கும் இதற்கு அடுத்த பாடத்திற்கும் முன்பாக, உங்கள் உரையைக் கேட்பவர்கள், "பரலோக நாடெந்தன் இன்பநாடாம்"/அல்லது "கவிதை பாடுவேன் கானானின் தேசத்தை" என்ற பாடலை பாடச்செய்ய நீங்கள் விரும்பலாம்.*

*இந்தப் பாடத்திற்கும் இதைத்தொடர்ந்து வரும் பாடத்திற்குமான சில மாற்றுத்தலைப்புகள் பின்வருமாறு: "பரலோகத்தினுடைய மலை உச்சிக்காட்சி"; "நித்திய நகரம்"; "மீண்டும் ஆதாயப்படுத்தப்பட்ட பரதீசு"; "இல்லத்திற்கு வருதல்"; "நான் இல்லம் செல்ல விரும்புகின்றேன்!"*

*விருப்பப்பட்டால், இந்தப் பாடத்தையும் இதற்கடுத்த பாடத்தையும் சேர்த்துப் படிக்கலாம்: பரலோகமென்பது ஆத்துமாவின் இல்லமாக உள்ளது, அது (1) அழகில் எழுச்சிமிகுந்துள்ளது (21:9-21), (2) மகிமையுடன் கதிர்வீசுகிறது (21:22-27), மற்றும் (3) அன்புடன் பொருந்தி இணைந்துள்ளது (22:1-5).*

*பரலோகம் பற்றி நான் எழுதியுள்ள மற்ற சில பாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன: "பரலோகத்தை மகிழ்வுடன் அனுபவிப்பது எப்படி?" என்ற பாடம் "கிறிஸ்து (மீண்டும்) வந்தநாள் மற்றும் பிற பிரசங்கங்கள்" என்ற புத்தகத்தில் உள்ளது, மற்றும் ஹான் பப்ளிஷிங் கம்பெனியில் இருந்து வெளியிடப்பட்ட "நான் பரலோகம் சென்ற அன்றிரவு" என்ற கைப்பிரதி.*

---

*குறிப்புகள்*

[1]Quoted in Herbert V. Prochnow, *A Dictionary of Wit, Wisdom, & Satire* (New York: Popular Library, 1964), 129. [2]"Home, Sweet Home," from the opera *Clari, the Maid of Milan* (1823). Quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown and Co., 1992), 405. [3]James Rowe, "Home of the Soul," *Songs of Faith and Praise,* ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [4]These first two questions were adapted from Jimmy Jividen, "Homesick for Heaven," *Abilene Christian University Lectures* (1980): 54. [5]The story of Mary was adapted from W. B. West Jr., *Revelation Through First - Century Glasses*, ed Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 150. [6]*சபை, ஆட்டுக்குட்டியின் மணவாட்டியாக உள்ளது (எபேசியர் 5:22-32ஐக் காணவும்). 21:2, 9ல் உள்ள "மணவாட்டி" என்ற சொற்றொடர், பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்ட சபையைக் குறிக்கிறது என்று நாம் கருத்துத்தெரிவித்தோம். (இந்தப்புத்தகத்தின்*

முற்பகுதியில் காணப்படும் "சகலத்தையும் புதிதாக்குதல்" என்ற பாடத்தில் 21:2க்கான குறிப்புகளைக் காணவும்.) மீண்டும் ஒருமுறை, மக்களுக்கும் (சபை) இடத்திற்கும் (பரலோகம்) இடையில் வித்தியாசம் ஏற்படுத்திக் காணுதலென்பது கடினமானதாக உள்ளது: தூதன் மணவாட்டியைக் காண்பிக்கப்போவதாக யோவானிடத்தில் கூறினார் (வசனம் 9), ஆனால் ஒரு நகரத்தைத்தான் அவருக்குக் காண்பித்தார் (வசனம் 10). [7]இது இறங்கி வரும் இரண்டாம் நகரமாகவோ அல்லது ஒரே நகரம் இரண்டாம்முறை இறங்கி வருதலாகவோ இருப்பதில்லை, ஆனால் 21:2ல் பேசப்பட்ட அதே நிகழ்ச்சியாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது ஒரே நிகழ்ச்சியை அடிக்கடி ஒருதடவைக்கும் மேலாகப் பேசுகிறது (14:8ஐயும்; 18:2ஐயும்; 9:20ஐயும்; 16:9ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கவும்). "பரலோகத்தை விட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கி வருதல்" என்ற சொற்றொடரின் தனிச்சிறப்புபற்றி, "சகலத்தையும் புதிதாக்குதல்" என்ற முந்திய பாடத்தில், 21:2ன் மீதான குறிப்புகளைக் காணவும். [8]இந்த நிகழ்ச்சியை எசேக்கியேல் 40:2ல் விவரிக்கப்படும் நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும். யோவான் மகாபாபிலோனைக் கண்ணோக்க *வனாந்திரத்திற்கு* எடுத்துச் செல்லப்பட்டிருந்தார், ஆனால் புதிய எருசலேமைக் கண்ணோக்குவதற்கு ஒரு *மலையின்மீது* கொண்டு செல்லப்பட்டார். [9]இது, யோவான் உடல்ரீதியாக எடுத்துச் செல்லப்பட்டார் என்று அர்த்தப்பட வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் அதற்கு மாறாக அவரது ஆவியே ஆவியானவரின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் 1:10ன் மீதான குறிப்புகளைக் காணவும். "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "கருத்துநோக்கில் விஷயங்களை வைத்தல்" என்ற பாடத்தில் உள்ள குறிப்பு எண் 5ஐயும் காணவும். [10]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "கருத்துநோக்கில் விஷயங்களை வைத்தல்" என்ற பாடத்தில் உள்ள, வச்சிரக்கல் பற்றிய குறிப்புகளைக் காணவும்.

[11]எசேக்கியேல் 40:3ஐக் காணவும். முன்னதாக யோவானுக்குச் தேவாலயத்தை அளக்கும்படி கோல் ஒன்று தரப்பட்டது (11:1). அந்த அளவீடு ஒரு கோலைக் கொண்டு செய்யப்பட்டது, அது பாதுகாப்பிற்கானதாக இருந்தது. ("வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும், "நாம் அளவுக்கேற்றபடி இருக்கின்றோமா?" என்ற பாடத்தில் 11:1க்கான குறிப்புகளைக் காணவும்.) 21ம் அதிகாரத்தில் அளத்தல் என்பது பொற்கோலைக்கொண்டு செய்யப்படுகிறது, இது பரலோகத்தின் மாட்சிமையைக் குறித்து நம் மனங்களை ஈர்ப்பதற்காகச் செய்யப்பட்டது. [12]"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும், "அறுவடை நேரம்!" என்ற பாடத்தில் *stadion* மற்றும் *stadia* என்ற சொற்களின் மீதான குறிப்புகளைக் காணவும். [13]NASB வேதாகமம், ரோம அளவீட்டை மைல்களாக மாற்றுவதன் மூலம் வசனப்பகுதியை அதிகம் புரிந்துகொள்ளக்கூடியதாக்க முயற்சி செய்கிறது. இது துரதிர்ஷ்டவசமாக, எண்களின் அடையாளத்துவத்தை அழித்துவிடுகிறது. "ஆயிரத்து ஐநூறு" என்பதில் அடையாளத்துவ முக்கியத்துவம் எதுவும் இருப்பதில்லை, ஆனால் "பன்னீராயிரம்" என்பதில் அது இருக்கிறது (இதைப் பற்றி நாம் இப்பாடத்தின் பிற்பகுதியில் காண்போம்). [14]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 244. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான, ஆயிரத்து ஐந்நூறு மைல்கள் இடைவெளிகொண்டுள்ள இரு நகரங்களை இவ்விடத்தில் பதிலாகப் பயன்படுத்துங்கள். [15]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 494. மீண்டுமாக, உங்கள் உரையைக்

கேட்பவர்களுக்குத் தொடர்புடைய ஒப்பீடு ஒன்றைப் பயன்படுத்துங்கள். [16]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும், "குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்" என்ற பாடத்தில் "பன்னிரண்டு" மற்றும் அதன் மடிப்பெருக்க எண்களின் அடையாளத்துவ அர்த்தத்தின்மீதான குறிப்புகளைக் காணவும். [17]ஒரு ஆயிரத்தைப் பன்னிரெண்டால் பெருக்குவதால் "பன்னீராயிரம்" என்ற எண் விளைகிறது மற்றும் "ஒரு ஆயிரம்" என்பது பத்து பெருக்கல் பத்து பெருக்கல் பத்து என்பதாக உள்ளது. ("பத்து" என்பது தன்னிலேயே முழுமைத்துவத்தின் அடையாளமாக உள்ளது; "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும், "குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்" என்ற பாடத்தில் "பத்து" என்ற எண்ணின்மீதான குறிப்புகளை மறு கண்ணோட்டமிடவும்.) [18]இதுபோன்றே ஒரு பிரமிடு உருவமும் வேதவசனப்பகுதியின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதாயிருக்கும். இருப்பினும் கனசதுரத்தின் உருவகமானது சந்தர்ப்பப்பொருளுக்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. கனசதுரம் என்பது ஒரு நகரத்தைப் போலிருக்காது என்பதால், உயரமும் அகலமும், ஆழமும் ஏறக்குறைய சமமாக உள்ள ஒரு நகரம் போன்ற உருவகத்தை வரையும்படி பிரையன் வாட்ஸிடம் நான் கேட்டுக்கொண்டேன். எங்களது வரைகலை முயற்சியில் உள்ள, தவிர்க்க இயலாத போதுமற்றதன்மைகளை நீங்கள் பொறுத்துக்கொள்வீர்கள்/மன்னிப்பீர்கள் என்று நம்புகின்றேன். [19]"தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே" என்ற சொற்றொடர், NASB வேதாகமத்தில் உள்ள ("தூதனுடைய அளவின்படியாகவும் உள்ள மனுஷ அளவின்படியே") என்ற வார்த்தைகளுக்கு நியாயமான விளக்கமாக உள்ளது. தூதன், யோவானுடைய வாசகர்களுக்குப் பழக்கப்படாத பரலோகமுறைப்படியான அளவீடு எதையும் பயன்படுத்தவில்லை என்பதே இங்கு கருத்தாக உள்ளது. [20]மீண்டும் NASB வேதாகமம், பயன்படுத்தப்பட்ட எண்ணின் அடையாளத்துவத்தை மறைத்துவிடுகிறது.

[21]அதுபோன்றே தக்கவகையிலான கட்டிடரீதியான செயல்முறையும் சாத்தியமற்றதாகவே உள்ளது, ஆனால் உருவகங்கள் என்பவை அடையாளத்துவமானவைகளாய் இருப்பதால் இது முக்கியமற்றதாக உள்ளது. வரைதலின் நோக்கத்திற்காக நான், பிரையன் வாட்ஸிடம் இந்த அளவீட்டைச் சுவரின் உயரமாக எடுத்துக்கொள்ளும்படி கூறினேன். [22]இந்த விவரிப்பை ஏசாயா 54:11, 12ல் உள்ள விவரிப்புடன் ஒப்பிட்டுக் காணவும். [23]"பவுல் விடப்பட்டுள்ளாரா இல்லையா?" என்பது பற்றிச் சிலர் தேவையற்ற விதத்தில் கவலைப்படுகின்றனர். "பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்" என்பது எல்லா அப்போஸ்தலர்களையும் குறிக்கிறது மற்றும் இது வெளிப்படுத்தின விசேஷத்தின் இப்பகுதியில் "பன்னிரண்டு" என்ற அடையாளத்துவ எண்ணின் மேலாதிக்கமான பயன்பாட்டுடன் இணக்கமானதாக உள்ளது. [24]விளக்கவுரையாளர்கள் இந்தக் கற்களின் பட்டியலினால் ஈர்க்கப்பட்டுள்ளனர், மற்றும் பலர் இந்தப் பட்டியலைத் தீர்த்துவைக்கப்பட வேண்டிய புதிராகக் கருதுகின்றனர். இவற்றில் எட்டுக்கற்கள், பிரதான ஆசாரியருடைய மார்ப்பதக்கத்தில் காணப்பட்ட அதே கற்கள் (யாத்திராகமம் 28:15-21) என்று சிலர் காண்பிக்கின்றனர், மற்றவர்கள் அந்த நாட்களில் கற்களை மூடநம்பிக்கையுடன் பயன்படுத்தியதின் பிறழ்வாக இதை முன்மொழிகின்றனர். விலையுயர்ந்த கற்களின் குறிப்பிட்ட மதிப்புப் பற்றிய கருத்தானது அந்த நாட்களில் சீரானதாக இருந்ததில்லை என்பதால், 19 மற்றும் 20 வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்களினால் அர்த்தப்படுத்தப்பட்ட கற்கள் என்ன என்பது குறித்து நாம் எதையும் நிச்சயமாய்க் கூற இயலாது. சில "ஆழமான" தனிக்குறிப்பை நாடுவதற்கு மாறாக, காட்சி

*முழுமையின் செயல்வலிவைக் கற்பனை செய்தல் மேலானதாகும். தொடர்ந்து வரும் பட்டியலானது நிறங்களைப் பொறுத்தமட்டில் 100சதவிகிதம் சரியானதாக இருக்கலாம் அல்லது இராதுபோகலாம், ஆனால் இது கண்ணைப்பிதுக்கும் வரிசையைச் சித்தரிக்கிறது!* [25]*நான்கு திசைகள் பற்றிய பட்டியல் அடிக்கடி, மனிதகுலம் முழுமையும் என்பதைக் குறிக்கிறது. ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்" என்ற பாடத்தில் காணப்படும், ''நான்கு'' என்ற எண்ணின் அடையாளத்துவ அர்த்தத்தின்மீதான குறிப்புகளைக் காணவும்.)* [26]*பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் பற்றிய குறிப்பு, பவுலை உள்ளடக்கியிருக்கிறதா அல்லவா என்று வாதம் செய்வதில் நோக்கம் எதுவும் இராதது போலவே லேவியர்களின் கோத்திரம் பதிமூன்றாவது கோத்திரமாக இருந்ததா அல்லவா என்று கலந்துரையாடுவதிலும் நோக்கம் எதுவும் இருப்பதில்லை. ''பன்னிரண்டு'' என்பது இஸ்ரவேலர்கள் எல்லாரையும் அர்த்தப்படுத்திற்று.* [27]*எசேக்கியல் 48:30-35ல் வாசல்களின் விவரிப்பைக் காணவும்.* [28]*''வெளிப்படுத்தின விசேஷம், 2'' என்ற புத்தகத்தில் காணப்படும் ''புயலின் மையத்தில் அமைதி" என்ற பாடத்தில் 7:4-8க்கான குறிப்புகளைக் காணவும்.* [29]*அமெரிக்காவில் நான், "ஒரு கோலிக்குண்டு அளவு" என்று கூறுவேன். நீங்கள் (உங்கள் சிறுவிரலின் நுனிப்பகுதி அளவான) ஒரு வட்டக்கல்லை காட்சி விவரிப்பாகப் பயன்படுத்தலாம்.* [30]*முத்து மாத்திரமே துன்பத்தில் உண்டாக்கப்படும் ஒரே விலையுயர்ந்த கல் என்று பல எழுத்தாளர்கள் விவரித்துள்ளனர். (மணல் துகள் ஒன்று சிப்பியின் வயிற்றினுள் செல்கிறது, அப்போது அந்த சிப்பி, அதனால் ஏற்படும் உறுத்தலை நீக்குவதற்காக ஒரு திரவத்தைச் சுரந்து அந்த மணல் துகளின்மீது மூடுகிறது.) பரலோகத்திற்குள் பிரவேசித்தல் என்பதும் எவ்வித மாறுபாடுமின்றி, துன்பங்களை உள்ளடக்கியதாகவே உள்ளது என்று அவர்கள் ஒரு இணைகருத்தைத் தரவழைக்கின்றனர்: இயேசுவின் பாடுகள் மற்றும் அவருடைய அடிச்சுவட்டில் நடப்பவர்களின் பாடுகள். இந்த விவரிப்பு, வேதாகம அடிப்படையைக் கொண்டிருந்தாலும் இல்லாதிருந்தாலும், இது சிந்தனையைத் தூண்டக்கூடியதாக உள்ளது.*

[31] Adapted from H. L. Ellison, *1 Peter - Revelation,* Scripture Union Bible Study Books Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 88. [32]*இந்தப்பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் இந்தப் பரலோக இல்லத்திற்கென்று தங்களைத் தயார் செய்து கொள்ளும்படி, அவர்களை உற்சாகப்படுத்த நீங்கள் விரும்பலாம். ஒருவர் கிறிஸ்தவராவதற்குத் தேவையான விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் பற்றிக் கூறுங்கள் அல்லது தேவனுடைய பிள்ளையாயிருந்து தவறு செய்கின்றவர் திரும்பக் கட்டப்படுவதற்கு, அவரை உற்சாகப்படுத்துங்கள். உங்கள் புத்திமதியின் ஒரு பாகமாக, நீங்கள் 1 யோவான் 3:2, 3 மற்றும் எபிரெயர் 12:14ஆகிய வசனங்களைப் பயன்படுத்த விரும்பலாம்.*

# மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. "இல்லம்" என்ற வார்த்தையைக் கேட்கும்போது நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? ''பரலோகம்'' என்ற வார்த்தையைக் கேட்கும்போது நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?
2. பரலோகத்தைப் பற்றி விவரிப்பதற்கு அடையாளத்துவ மொழிநடை பயன்படுத்தப்பட்டுள்ளது ஏன்? இது, பரலோகமானது இந்த விவரிப்பைக் காட்டிலும் அதிகம் ஆச்சரியமுள்ளதாக இருக்கும் என்று அர்த்தப்படுகிறதா?
3. "பன்னிரண்டு" என்ற எண்ணின் அடையாளத்துத் தனிச்சிறப்பு என்ன? இந்தப் பாடத்தில் நாம் படிக்கும் வேதவசனப்பகுதியில் "பன்னிரண்டு" என்ற எண் எத்தனைமுறை காணப்படுகிறது? இந்த எண்ணின் பல்வேறு மடிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளவை யாவை? (கிரேக்க அளவைகளை நவீன அளவைகளாக மாற்றியிராத மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் ஆய்வு செய்யவும்.) (தமிழ் வேதாகமத்தில் கிரேக்க அளவைகள் அப்படியே தரப்பட்டுள்ளன.)
4. பரலோக நகரம் ஒரே அளவு நீளம், அகலம் மற்றும் உயரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது என்பதன் தனிச்சிறப்பு என்ன?
5. முத்துக்கள் வாசல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதில் ஏதேனும் விசேஷத் தனிச்சிறப்பு உள்ளதாக நீங்கள் நினைக் கின்றீர்களா?
6. 21:22-22:5ல் தரப்பட்டுள்ள பரலோகத்தைப் பற்றிய விபரங்களை முன்கண்ணோட்டமிடுங்கள். உங்களுக்கு மிகமதிப்புள்ளதாக உள்ள பரலோகத்தின் பண்பு எது?
7. நீங்கள் பரலோகம் செல்ல எவ்வாறு ஆயத்தமாக முடியும்?



பரலோகத்தை விட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிற
எருசலேமாகிய பரிசுத்த நகரம் (21:10)